முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.
O.S. No. 170 / 2013

08.04.2019
வா.சா.1 : பெயர் : பாலகுமார்
மேற்படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :

4ம் பிரதிவாதி எனக்கு சொந்த அண்ணன் ஆவார். வழக்கின் 2ம் வாதி எனது அம்மாவின் தம்பி, எனக்கு தாய்மாமன் ஆவார். 1ம் பிரதிவாதியான டிரஸ்டிக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் என்றால் சம்பந்தம் எதுவும் கிடையாது. ஆனால் எனது மனைவி அந்த டிரஸ்டிக்கு சம்பந்தப்பட்ட கல்லூரியில் B.Ed. படித்து வந்தார். 2011ல் அந்த கல்லூரியில் எனது மனைவி B.Ed. முடித்துள்ளார். 2013ல் எனக்கும், 1ம் பிரதிவாதியின் டிரஸ்டிக்கும் என்ன சம்பந்தம் என்றால் எந்த சம்பந்தமும் கிடையாது. இந்த தாவாவை தாக்கல் செய்யும்போது எனது மனைவி அந்த கல்லூரியில் B.Ed. படித்ததால் 1ம் பிரதிவாதி டிரஸ்டிக்கு எதிராக பொது நல வழக்காக தாவாவை தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி டிரஸ்ட் சம்பந்தமாக தாக்கல் செய்த இந்த வழக்கை தவிர வேறு எந்த வழக்குகளும் பொது நல வழக்காக நான் தாக்கல் செய்ததில்லை என்றால் சரிதான். நான் M.A., M.Phil., மற்றும் M.Sc. ஆகியவை படித்துள்ளேன். 1ம் பிரதிவாதி டிரஸ்டிக்கு சம்பந்தப்பட்ட கல்லூரியில் நான் படித்ததில்லை. நான் துறையூர், தாளுர் அரசு ஆரம்ப பள்ளியில் நான் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கேட்டரிங் இன்ஸ்ட்டியூட் வைத்து நடத்தி வருகிறேனா என்றால் இல்லை. 4ம் பிரதிவாதிக்கும் எனக்கும் எந்தவித விரோதமும் கிடையாது என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதி டிரஸ்டில் பொருளாளராக இருந்தார். டிரஸ்டி நடவடிக்கைகள் சம்பந்தமாக 4ம் பிரதிவாதி பொருளாளராக இருந்தார் என்ற முறையில் அவர்மீது முறைகேடு ஏதும் கண்டேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள தாவா பிராதில் 2, 3 பிரதிவாதிகளை தவிர மற்ற பிரதிவாதிகள் பெயரில் எந்தவித முறைகேடுகளும் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் எல்லாரும் சேர்ந்து 1ம் பிரதிவாதி டிரஸ்டில் முறைகேடுகள் செய்ததால்தான் எல்லோரையும் நான்

தரப்பினர்களாக காட்டியுள்ளேன். தாவா 8ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதி டிரஸ்டில் இடையில் சேர்க்கப்பட்ட டிரஸ்டி ஆவார். 8ம் பிரதிவாதியை 1ம் பிரதிவாதி டிரஸ்டில் 2012ம் வருடத்தில் சேர்த்தார்கள். இந்த வழக்கில் காட்டப்பட்டுள்ள 8ம் பிரதிவாதியை 12.7.2013ல் ஏற்பட்ட வா.சா.ஆ.3 ஆன கூடுதல் டிரஸ்ட் ஆவணத்தின் அடிப்படையில்தான் டிரஸ்டியாக சேர்க்கப்பட்டார். 8ம் பிரதிவாதியை எதன் அடிப்படையில் தாவாவில் தரப்பினராக சேர்த்தேன் என்றால் அவர் இந்த டிரஸ்டிக்கு துணை தலைவராக இருந்து செயல்பட்டு வந்ததால்தான் அவரை தாவாவில் தரப்பினராக சேர்த்துள்ளேன். 8ம் பிரதிவாதி டிரஸ்டில் என்ன முறைகேடு செய்தார் என்று நான் தாக்கல் செய்துள்ள பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் கேட்டரிங் டெக்னாலஜி கல்லூரியில் 8ம் பிரதிவாதி செய்த முறைகேடுகளால்தான் இந்த தாவாவில் தரப்பினராக சேர்த்துள்ளேன். இந்த தாவா தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதிகளுக்கு நான் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. நான் அரசு ஊழியராக பணிபுரிவதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கை தாக்கல் செய்வதற்கு எனது துறையில் அனுமதி பெற்றேனா என்றால் எனது வழக்கறிஞர் அனுமதி பெறவேண்டியதில்லை என்று சொன்னதால் நான் அனுமதி பெறவில்லை. ஈட்டிய விடுப்பின் அடிப்படையில் நான் இன்று நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொல்கிறேன். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள இடைக்கால மனுக்களில் நடைபெற்ற விசாரணையின்போது நான் பலமுறை நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் சரிதான். அப்பொழுதும் நான் தற்செயல் விடுப்பும் மற்றும் ஈட்டிய விடுப்பும் எடுத்து நீதிமன்றத்திற்கு வந்தேன். வா.சா.ஆ.4ன் கவரிங் லெட்டரின் அசலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தேன். தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி தகவல் கேட்ட மனுவின் ரசீது என்னிடம் உள்ளது. நான் கேட்ட கேள்விக்குண்டான நகல் என்வசம் இல்லை. மேற்படி தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி கேட்ட கேள்விகள் அனைத்தும் பொருளாளரிடம் தான் கேட்டேன். 1ம் பிரதிவாதியின் சேர்மன் யார் என்பது எனக்கு தெரியும். தகவல் அலுவலர் பொருளாளர் என்ற விலாசத்திற்கு என்னுடைய தகவல் கோரும் மனுவை அளித்திருந்தேன். தகவல்

கோரும் மனுவினை பார்த்தால்தான் நான் யாருக்கு அனுப்பினேன் என்பது தெரியவரும் என்றால் சரிதான். நான் தகவல் கோரும்போது 1 ம் பிரதிவாதியின் பொருளாளரான 4 ம் பிரதிவாதிதான் தகவல் அலுவலர் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த தாவாவானது எனது சகோதரர்தான் என்னை வைத்து தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாவா தாக்கல் செய்த பின்பு வா.சா.ஆ.4 ஆனது தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் நான் பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ன் முதல் பக்க கவரிங் லெட்டரில் தகவல் அலுவலர் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 லுள்ள விவரங்கள் பொறுத்து எனக்கு நேரடியாக தெரியாது, இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள 2 ம் பிரதிவாதி, 3 ம் பிரதிவாதி மற்றும் 4 ம் பிரதிவாதி ஆகியோர்கள் பேசியதை கேட்டு தெரிந்து கொண்டேன். 2 ம் பிரதிவாதி எனக்கு பெரியப்பா ஆவார். 3 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதியின் நண்பர் ஆவார். அவர்கள் குடும்பத்தில் மனஸ்தாபம் உண்டா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 ஐ நானும், எனது சகோதரரான 4 ம் பிரதிவாதியும் சேர்ந்து தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 2004 ல் தான் 1 ம் பிரதிவாதி டிரஸ்ட் உருவாக்கப்பட்டது. 1 ம் பிரதிவாதி டிரஸ்டானது ஏற்பட்ட தேதியன்று அதற்கு அசையா சொத்துக்கள் இருந்ததா என்றால் அது எனக்கு தெரியாது. டிரஸ்டுக்கு மொத்தமாக எத்தனை ஏக்கர் விஸ்தீரணம் உள்ள சொத்துக்கள் உள்ளது என்பது எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதிக்கு வாங்கப்பட்ட சொத்துக்கள் எந்த தேதியில் வாங்கப்பட்டது என்பது எனக்கு தெரியும். 26.10.2004 ல் 1 ம் பிரதிவாதிக்கு எவ்வளவு சொத்து வாங்கப்பட்டது என்பது எனக்கு தெரியும். 26.10.2004 ல் வாங்கப்பட்ட சொத்தானது தோராயமாக 22 ஏக்கர் சொத்து இருக்கும். 26.10.2004 ம் தேதி டிரஸ்டு ஆரம்பிக்கப்பட்டு 8 நாட்கள் கழித்து ஏற்பட்ட கிரயமாகும். அன்றைய தேதியில் 1 ம் பிரதிவாதிக்கு எந்தவித கல்லூரியும் கிடையாது. 26.10.2004 ல் இரண்டு கிரயமாக சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு வாங்கப்பட்ட சொத்துக்களில் சுமார் 12 ஏக்கர்தான் டிரஸ்ட் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். 26.10.2004 ல் ஏற்பட்ட மற்றொரு கிரய பத்திரமானது

வழக்கில் காட்டப்பட்டுள்ள 2, 3 பிரதிவாதிகளான பெரியண்ணன் மற்றும் ஆண்டி பெயர்களில் உள்ளது என்றால் சரிதான். அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்டபோது, அந்த அறக்கட்டளைக்கு எவ்வளவு பணம் போடப்பட்டது என்பது தெரியுமா என்றால் தெரியும், ரூ.30,000 போடப்பட்டது. இந்த இரண்டு பத்திரத்திற்குண்டான கிரய தொகை யாரால் கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, 2 முதல் 4 பிரதிவாதிகளை கேட்டால்தான் தெரியும். டிரஸ்ட் ஏற்பட்ட தேதியில் 2 கிரய பத்திரங்கள் மூலமாக கிரயம் செய்ததற்கான தொகை 1 ம் பிரதிவாதிக்கு இல்லை என்று சொன்னால் சரிதான். 2 வது கிரய பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள சுமார் 10 ஏக்கர் நிலங்களில் ஒரு பகுதியை 2 மற்றும் 3 பிரதிவாதிகள், 1 ம் பிரதிவாதி டிரஸ்ட்டுக்கு தான செட்டில்மெண்ட் மூலமாக ஏற்படுத்திக் கொடுத்தார்கள். இந்த 2 கிரய பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள சுமார் 22 ஏக்கர் சொத்துக்களும் தற்பொழுது டிரஸ்ட் கன்ட்ரோலில் உள்ளது என்றால் சரிதான். 2005 ல் முதன்முதலாக 1 ம் பிரதிவாதி டிரஸ்டானது கல்யாண மண்டபத்தை வாடகைக்கு எடுத்து துவக்கப்பட்டது. அந்த கல்யாண மண்டபத்தில் எவ்வளவு நாட்களாக 1 ம் பிரதிவாதி டிரஸ்ட் இயங்கி கொண்டிருந்தது என்பது எனக்கு தெரியாது. 22 ஏக்கர் உள்ள சொத்துக்களில் கட்டிடங்கள் உள்ளது. 2 கிரய பத்திரங்களுக்கு பின்பு 1 ம் பிரதிவாதி டிரஸ்டு பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது. 2009 ல் ஒரு முறை 1 ம் பிரதிவாதி பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது. 2009 ல் 1 ம் பிரதிவாதி பெயரில் வாங்கப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் 30 ஏக்கர் இருக்கும். இந்த 30 ஏக்கர் நிலத்தில் 1 ம் பிரதிவாதி டிரஸ்டுக்கு கட்டிடங்கள் ஏதும் கட்டப்பட்டதா என்றால் முழுவதும் எனக்கு தெரியாது. 2004, 2009 க்கு பின்னிட்டு 1 ம் பிரதிவாதி பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. தற்பொழுது இன்றைய தேதியில் 1 ம் பிரதிவாதி டிரஸ்டுக்கு 90 ஏக்கர் நிலம் உள்ளதா என்றால் இல்லை, சுமார் 87 ஏக்கர் உள்ளது. இந்த 87 ஏக்கர் நிலமும் ஒரே சதுரமாக உள்ளது.

(1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)